# முக்கிய பொருளாதார கொள்கை வழிமுறைகள்[1]

## (2023ஆம் ஆண்டின் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டிற்கான பொருளாதார மீளாய்விற்கான குறைநிரப்பியொன்றாக வெளியிடப்பட்டுள்ளது)

**மத்திய வங்கித்தொழில்**

2023 செத்தெம்பர் 15 - 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தை (அத்தியாயம் 422) இரத்துச்செய்யும் வகையில் இலங்கை மத்திய வங்கியைத் தாபிப்பதற்கும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதன் இடர்நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமொன்றாக 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டம் வெளியிடப்பட்டது.

2023 ஒத்தோபர் 03 - இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரகாரம், நிதி அமைச்சரும் இலங்கை மத்திய வங்கியும் நாணயக் கொள்கைக் கட்டமைப்பு உடன்படிக்யையில் கைச்சாத்திட்டுள்ளன. இது இலங்கை மத்திய வங்கியின் பணவீக்க இலக்கிடலை குறித்துரைக்கின்றது. இவ் உடன்படிக்கையின் கீழ், மத்திய வங்கியானது ±2 சதவீதப் புள்ளிகளைக் கொண்ட எல்லையினுள் 5 சதவீதத்தில் காலாண்டு முதன்மைப் பணவீக்கத்தை அடிப்படையாகக் கொண்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைப் பேணுவதற்கு எதிர்பார்க்கின்றது.
(2023 ஒத்தோபர் 5ஆம் திகதியிடப்பட்ட 2352/20ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் கீழ் பொது மக்களுக்கு வழங்கப்பட்டது)

**நாணயக் கொள்கை**

2023 சனவரி 02 - 2023 சனவரி 16 தொடக்கம், குறித்த உரிமம்பெற்ற வர்த்தக வங்கிக்கான துணைநில் வைப்பு வசதியின் கிடைப்பனவு கலண்டர் மாதமொன்றுக்கு உயர்ந்தபட்சம் ஐந்து (05) தடவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக, குறித்த உரிமம்பெற்ற வர்த்தக வங்கிக்கான துணைநில் கடன்வழங்கல் வசதியின் கிடைப்பனவு ஏதேனும் வழங்கப்பட்ட திகதியில் அத்தகைய உரிமம்பெற்ற வர்த்தக வங்கியின் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் 90 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது.

[1] 2023 சனவரி 01 தொடக்கத்திலிருந்து 2024 மாச்சு 28 வரை நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய பொருளாதார கொள்கை வழிமுறைகளையும் கிட்டிய எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் கொள்கை வழிமுறைகளையும் உள்ளடக்குகின்றது.

| | |
|---|---|
| 2023 மாச்சு 03 | - துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 100 அடிப்படை புள்ளிகளினால் 2023 மாச்சு 03 வியாபார முடிவிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் முறையே 15.50 சதவீதத்திற்கும் 16.50 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டன.<br><br>- ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபாவின் செலாவணி வீதத்தின் ஒரு நடு வீதம் மற்றும் மாறுபாட்டு எல்லை என்பனவற்றின் அறிவிப்பினூடாக மேற்கொள்ளப்படும் சந்தை வழிகாட்டல் வெளியீடானது 2023 மாச்சு 07 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இடைநிறுத்தப்பட்டது. |
| 2023 யூன் 01 | - துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 13.00 சதவீதத்திற்கும் 14.00 சதவீதத்திற்கும் 250 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டன. |
| 2023 யூலை 06 | - துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 11.00 சதவீதத்திற்கும் 12.00 சதவீதத்திற்கும் 200 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டன. |
| 2023 ஓகத்து 09 | - 2023 ஓகத்து 16 தொடங்குகின்ற ஒதுக்குப் பேணுதல் காலப்பகுதி தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் நியதி ஒதுக்குத் தேவைப்பாடானது 2.00 சதவீதத்திற்கு 2.00 சதவீதப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டது. |
| 2023 ஒத்தோபர் 05 | - துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 10.00 சதவீதத்திற்கும் 11.00 சதவீதத்திற்கும் 100 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டன. |
| 2023 நவெம்பர் 24 | - துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 9.00 சதவீதத்திற்கும் 10.00 சதவீதத்திற்கும் 100 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டன. |
| 2024 பெப்புருவரி 09 | - 2024 பெப்புருவரி 16 தொடக்கம், துணைநில் கடன்வழங்கல் வசதி மீதான கட்டுப்பாடு நீக்கப்பட்டு துணைநில் வைப்பு வசதி கலண்டர் மாத காலப்பகுதயில் ஐந்து தடவைகள் (05) தொடக்கம் பத்து தடவைகள் (10) வரை தளர்த்தப்பட்டது. |
| 2024 மாச்சு 26 | - துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே, 50 அடிப்படைப் புள்ளிகளினால் 8.50 சதவீதத்திற்கும் 9.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன.<br>- 2024 ஏப்பிறல் 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில், துணைநில் வைப்பு வசதி மீதான கட்டுப்பாடு நீக்கப்பட்டது.. |

**சிறப்புக் கொடுகடன் திட்டங்கள்**

| | |
|---|---|
| 2023 சனவரி 01 | - 2023 சனவரி 01 தொடக்கம் 2027 திசெம்பர் 31 வரை தொடங்குகின்ற விதத்தில், சுயதொழில்வாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்பு கடன் திட்டத்தின் - கட்டம் II தொழிற்பாட்டு காலப்பகுதியை நீடிப்பதற்கு இலங்கை அரசாங்கத்துடன் நிருவாக உடன்படிக்கை கைச்சாதிடப்பட்டது. |
| 2023 பெப்புருவரி 15 | - சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி - கட்டம் IV, சலுகை ரீதியான நியதிகளின் கீழ் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை மீள்வலுப்படுத்துவதற்கான தொழிற்படு மூலதன கடனை வழங்குவதற்கு நடைமுறைப்படுத்தப்பட்ட மீள்நிதியிடல் திட்டம் முடிவுறுத்தப்பட்டது. |
| 2023 மாச்சு 22 | - தேசிய வழிநடாத்தல் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூதாயம் அடிப்படையிலான நிதியியல் இடையீட்டாளர்களைத் தகைமையுடைய பயன்பெறுநர்களாக உள்ளடக்குவதற்கு சிறுஉடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 4பி கடன் திட்டங்களின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன. |
| | - தேசிய வழிநடாத்தால் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூதாயம் அடிப்படையிலான நிதியியல் இடையீட்டாளர்களை உள்ளடக்குவதற்கும் உயர்ந்தபட்சம் கடன் எல்லையை ரூ.500,000இற்கு அதிகரிப்பதற்கும் சிறுஉடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீள்நிதியிடல் கடன் திட்டங்களின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன. |
| 2023 மாச்சு 27 | - 2023 சனவரி 01 தொடக்கம் 2023 யூன் 30 வரை தொடங்குகின்ற விதத்தில், சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தின் தொழிற்பாட்டு காலப்பகுதியை நீடிப்பதற்கு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு மற்றும் நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுடன் நிருவாக உடன்படிக்கை கைச்சாதிடப்பட்டது. |
| 2023 மாச்சு 30 | - உயர்ந்தபட்ச கடன் எல்லையை ரூ.400,000இற்கு அதிகரிக்கின்ற அதேவேளை 2023 யூன் 30இற்கு பின்னர் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களை துணைக் கடன்களை வழங்குவதிலிருந்து தடுக்கும் வகையில் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன. |

2023 ஓகத்து 10 - 2023 யூலை 01 தொடக்கம் 2025 யூன் 30 வரை தொடங்குகின்ற விதத்தில் சிறுஉடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் தொழிற்பாட்டு காலப்பகுதியை நீடிப்பதற்கு நிதி அமைச்சுடன் நிருவாக உடன்படிக்கை கைச்சாதிடப்பட்டது.

2023 செத்தெம்பர் 15 - புதிய மத்திய வங்கிச் சட்டமாக்கலுடன், சௌபாக்யா கடன் திட்டம் மற்றும் உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்திக் கடன் திட்டம் ஆகியவற்றின் தொழிற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டன.

2023 நவெம்பர் 30 - இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஒத்துழைப்புடன் இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களுக்கான ‘‘மனுசவி’’ கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தும் வகையில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

2024 சனவரி 03 - மத்திய வங்கியின் ஆளுகைச் சபை எதிர்காலத்தில் புதிய அரசாங்கத்தையும் நன்கொடையாளர் நிதியுதவி கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில்லை என்ற கொள்கை தீர்மானத்தை எடுத்தது. எனினும், அத்திட்டங்கள் முடியும் வரை ஏற்கனவேயுள்ள கடன் திட்டங்களை மத்திய வங்கி தொடர்ந்து செயல்படுத்தும்.

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

2023 பெப்புருவரி 01 - தொடர்புடைய நாட்டின்/அதிகாரசபையின் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பிராந்தியங்களுக்கும் நாடுகளுக்குமிடையிலான கொடுப்பனவு வலையமைப்புக்களுடன் இணைவதற்கு லங்காபே (பிறைவட்) லிமிடெட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இதற்கமைய, யூனியன்பே இன்டர்நெஷனல் கோபரேஷன் லிமிடெட், சீன மற்றும் இந்திய தேசிய கொடுப்பனவுகள் கூட்டுத்தாபனம் இன்டர்நெஷனல் பேமன்ட்ஸ் லிமிடெட் ஆகியவற்றுடன் லங்காபே பிறைவட் லிமிடெட் இணைக்கப்பட்டுள்ளது, சீன மற்றும் இந்திய சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் இருக்கும் போது, லங்காகியூஆரின் (LANKAQR) மூலம் கொடுப்பனவு பணப்பைகளினூடாக செலுத்தும் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்வதை இந்தியா வசதிப்படுத்துகின்றது. 2023 பெப்புருவரியிலிருந்து சீன சுற்றுலாப் பயணிகளால் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு இயலுமாகவிருந்தது. 2024 பெப்புருவரி 12 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் இலங்கைக்கு வருகைத்தருகின்ற இந்திய சுற்றலாப் பயணிகள் லங்காகியூஆரைப் பயன்படுத்தி பணம் செலுத்த முடியும்.

2023 மே 08 - வெளிநாட்டு கொடுப்பனவு செயலிகளைப் பயன்படுத்தி, லங்காகியூஆரின் மூலம் செலுத்தப்படும் கொடுப்பனவுகள் 1.8 சதவீதம் கொண்ட வணிகர் கழிவிடல் வீதமொன்றுக்கு ஒப்புதலளிக்கப்பட்டது. உள்நாட்டு லங்காகியூஆர் கொடுப்பனவுகளுக்கு 0.5 சதவீதம் கொண்ட வணிகர் கழிவிடல் வீதம் காணப்படுகின்றது

2023 யூலை 20 - பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்களின் அளவு மற்றும் பெறுமதியின் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கு பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி ஆளி மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி போன்றவற்றுக்கான பல் அடுக்கு பொறுப்பு முகாமைத்துவ எல்லை கட்டமைப்பு திருத்தப்பட்டது.

2023 ஓகத்து 31 - கொடுப்பனவு நடைமுறைகள் அல்லது பணிகளுடன் தொடர்புடைய பாதுகாப்பற்ற, திருப்தியற்ற அல்லது நியாயமற்ற நடைமுறைகள் தொடர்பாக பொது மக்களிடமிருந்து தகவல்களைச் சேகரிப்பதற்கான முன்மொழி இணையத் தளப் படிவம் உருவாக்கப்பட்டது.

2023 திசெம்பர் 29 - டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல் வழிகளைப் பின்பற்றுவதை மேலும் முன்னேற்றும் வகையில், லங்காபே இணையவழி கொடுப்பனவுத் தளம், நேரடி பற்று வசதி, பகிரப்படும் உங்கள் வாடிக்கையாளரைத் தெரியப்படுத்துங்கள் வசதி, அத்துடன் அரசாங்க டிஜிட்டல் கொடுப்பனவுத் தளம் போன்ற முன்னெடுப்புகளுடன் இணையுமாறு உரிமம்பெற்ற வங்கிகளை மத்திய வங்கி கட்டாயப்படுத்தியது. மத்திய வங்கியினால் இனங்காணப்பட்ட ஏனைய முக்கிய விடயங்களான வாடிக்கையாளரின் கடன் மற்றும் பற்று கொடுக்கல்வாங்கல்களுக்கான உண்மை நேர அறிவித்தல்களை இயலச்செய்தல், பின்தங்கிய பிரதேசங்களில் டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களை ஊக்குவித்தல், டிஜிட்டல் வழிகளின் மூலம் மேற்கொள்ளப்படும் கொடுகடன் அட்டை தீர்ப்பனவுகளை உடனடியாக இற்றைப்படுத்தல், டிஜிட்டல் கொடுப்பனவுகளுக்கு தொடர்பு தளத்தை உருவாக்குதல் போன்றவற்றையும் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளது. மேலும், வணிகர் கழிவிடல் வீதத்தை வாடிக்கையாளர்களுக்கு வழங்க வேண்டாம் என்று தமது வணிகர்களை அறிவுறுத்துமாறு உரிமம்பெற்ற நிதியியல் கையகப்படுத்துபவர்களாகத் தொழிற்படும் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டது.

2023 திசெம்பர் 29 - இலத்திரனியல் பணப் பைகளின் மூலம் டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களுடன் இணைந்து வெளிநாட்டுப் பணவனுப்பல்களை ஊக்குவிக்கும் வகையில், உயர்த்தப்பட்ட மற்றும் அடிப்படை இ-பணப் பை எல்லைகள் 2024 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில், முறையே ரூ.50,000.00 மற்றும் ரூ.10,000.00 போன்ற தொகைகளிலிருந்து ரூ.150,000.00 மற்றும் ரூ.20,000.00 தொகைகளுக்கு உயர்த்தப்பட்டது.

2024 சனவரி 17 - செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவு செயலிகளின் மூலம் பாதுகாப்பானதும் மிகவும் நம்பிக்கையானதுமான கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்தும் பொருட்டு, 2024 ஏப்பிறல் 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் கொடுப்பனவுத் தொகை ரூ.10,000 தொகைக்கு சமமானதாக அல்லது அதை விஞ்சுகின்றதாக காணப்படுமாயின், செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவு செயலியுடன் இணைக்கப்பட்டுள்ள கணக்கு வழங்குநரிடமிருந்து (நிதியியல் நிறுவனம்) ஒரு நேர கடவுச்சொல்லொன்றைக் கோருவதற்கு ஜஸ்ட்பே கொடுக்கல்வாங்கல்களை ஆரம்பித்து வைத்து மத்திய வங்கி செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவு செயலிகளை கட்டாயப்படுத்தியது. ஜஸ்ட்பே செல்லிடத் தொலைபேசி செயலியைப் பயன்படுத்துபவருக்கு பயனரின் எந்தவொரு நிதியியல் நிறுவனத்திற்கும் கணக்குகளை இணைப்பதை இயலச்செய்து செல்லிடத் தொலைபேசி செயலியுடன் இணைக்கப்பட்டுள்ள வாடிக்கையாளரின் அக் கணக்குகளிலிருந்து நிதியங்களைப் பெறுவதன் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்கின்றது.

2024 பெப்புருவரி 01 - நேபாள்பே கியூஆர் செல்லிடத் தொலைபேசி செயலிகளின் மூலம் நேபாள சுற்றுலாப் பயணிகளினால் மேற்கொள்ளப்படும் லங்காகியூஆர் கொடுக்கல்வாங்கல்களை ஏற்றுக்கொள்வதற்கான நேபாள் கிளியரிங் ஹவுஸ் லிமிடெட்டுடன் இணைவதற்கு லங்காபே (பிறைவட்) லிமிடெட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

**பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்**

2023 மாச்சு 03 - இணங்குவித்தல் குறைபாடுகள் மீதான உரிய விழிப்புக்கவனத்திற்காக அழைப்புவிடுத்து அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை வழங்கப்பட்டது..

2023 யூன் 07 - உண்மைச் சொத்துத் துறை பற்றிய நிறுவனம்சார் இணங்குவித்தல் மீது 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் 2023ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க சுற்றறிக்கை உண்மைச் சொத்து நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

2023 யூன் 13 - உள்நாட்டு இலத்திரனியல் நிதிய மாற்றல் அடிப்படை அளவுக் கொடுக்கல்வாங்கல்களை நிதியியல் உளவறிதல் பிரிவின் goAML முறைமைக்கு அறிக்கையிடுவது பற்றி 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வழிகாட்டல் வழங்கப்பட்டது.

2023 ஓகத்து 07 - 2023-2028 காலப்பகுதிக்கு இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் மீதான தேசியக் கொள்கையினை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக ஒப்புதல் அனுமதி கிடைக்கப்பெற்றது.

2023 ஓகத்து 22 - 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் கட்டாய அறிக்கையிடல் மீது முன்னர் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் அறிக்கையிடல் படிவங்களை கடைப்பிடிப்பதன் மீது ஞாபகமூட்டலொன்றாக அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும், உரிமம்பெற்ற காப்புறுதிக் கம்பனிகளுக்கும், உரிமம்பெற்ற பங்குத் தரகர்களுக்கும் 2023ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கச் சுற்றறிக்கை வழங்கப்பட்டது.

2023 செத்தெம்பர் 01 - சட்டத்தரனிகள் மற்றும் நொத்தாரிசுகளுக்காக பணம் தூயதாக்கலுக்கெதிராக மற்றும் பங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் இணங்குவித்தல் மீது 2023இன் 02ஆம் இலக்க வழிகாட்டல் வழங்கப்பட்டது.

**வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம் மற்றும் பன்னாட்டுத் தொழிற்பாடுகள்**

2023 சனவரி 26 - ‘‘உள்முக முதலீடுகள் பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்கள் - உள்முக முதலீடுகள் பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்கள் திட்டம்’’ மீது விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை இரத்துச்செய்தல்.

- இலங்கை மத்திய வங்கியின் ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா வாங்குதல்-விற்றல் மற்றும் விற்றல்-வாங்குதல், வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஏலங்கள் என்பவற்றில் பங்கேற்பதன் மீது வங்கிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல்.

2023 பெப்புருவரி 24 - உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் சந்தைத் தூண்டல் வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் பொருட்டு மாற்றல் செய்யப்பட்ட உள்முகத் தொழிலாளர் பணவனுப்பல்களினதும் ஏற்றுமதி பெறுகைகளுடன்/வருவாய்களுடன் தொடர்புடைய

மாற்றப்பட்ட பணித் துறையினதும் கட்டாயமாக மாற்றல்செய்யப்பட்ட ஏற்றுமதி பெறுகைகளின் எஞ்சிய பெறுமதியினதும் கணக்கில் உரிமம்பெற்ற வங்கிகள் மூலம் மத்திய வங்கிக்கு வாராந்த கட்டாய வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகளை 2023 பெப்புருவரி 27 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 25 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகக் குறைத்தல்.

2023 பெப்புருவரி 27 - வதியாத முதலீட்டாளர் ஒருவரிடமிருந்து கிடைத்த கம்பனியின் பங்கு மூலதனத்திற்கான முதலீடாகவிருக்கின்ற, கிடைக்கப்பெற்ற பெறுகைகளிலிருந்து விசேட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் - முதலீட்டைப்பெறுபவர் கணக்கினை திறந்து பேணுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அனுமதித்து 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணிப்புரைகள் வழங்கப்பட்டன. ஆயினும், நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களையும் அத்துடன் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்) ஏற்பாடுகளின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன் வசதிகளின் மீள்கொடுப்பனவுகளையும் நிறைவேற்றுவதற்கு முதலீட்டைப்பெறுபவர் எதிர்காலத் தேவைப்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

2023 மாச்சு 03 - "வெளிநாட்டுச் செலாவணியின் ஒரு நாளுக்குள்ளேயான தளம்பலை முகாமைசெய்தல்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கியினால் 2022 மே 12 அன்று விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை 2023 மாச்சு 07 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் இரத்துச்செய்தல்.

"உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" மற்றும் "ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு முறையே 2021 சனவரி 27 மற்றும் 2021 பெப்புருவரி 18 அன்றும் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அதனைத் தொடர்ந்து திருத்தப்பட்டவாறான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை 2023 மாச்சு 07 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் இரத்துச்செய்தல்

2023 யூன் 28

- கட்டளைத் திகதியிலிருந்து தொடங்குகின்ற ஆறு மாதங்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் வெளிமுகப் பணவனுப்பல்களை இடைநிறுத்துவதற்கு/ மட்டுப்படுத்துவதற்கு 2286/27ஆம் இலக்க 2022 யூன் 30ஆம் திகதியிடப்பட்ட அத்துடன் 2311/38ஆம் இலக்க 2022 திசெம்பர் 22ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட கட்டளைகளை இரத்துச்செய்வதன் மூலம் 2338/40ஆம் இலக்க 2023 யூன் 28ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர் அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழான கட்டளை வழங்கப்பட்டது.

2023 திசெம்பர் 04

- 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதிச் சட்ட - வணிக மைய ஒழுங்குவிதிகளின் நியதிகளின் பிரகாரம் உள்நாட்டு சந்தைக்கு பொருட்களை விற்பனைசெய்வதற்கு அனுமதிக்கப்பட்ட தொழில்முயற்சிகள் அடங்கலாக 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க 2021 மாச்சு 18ஆம் திகதியிடப்பட்ட பணிப்புரைகளின் இணைப்பு I ஐத் திருத்தம்செய்து, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீது 2023ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க பணிப்புரைகள் வழங்கப்பட்டன.
- திருத்தப்பட்டவாறான 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதிச் சட்ட - வணிக மைய ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைய உள்நாட்டுச் சந்தைக்கு பொருட்களை/உற்பத்திகளை விற்பனைசெய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள இலங்கையில் வியாபாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள தொழில்முயற்சிகளுக்கு கொடுப்பனவுகளையும் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கு அல்லது வெளிநாட்டு கொடுப்பனவுகள் தொடர்பில் கப்பற்பொருள் அனுப்புதல், கப்பலேற்றுதல்/விமானசேவை முகவர்களின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளின் பேணப்படும் கணக்குகளுக்கு மாற்றல்களை அனுமதித்து 2021 மாச்சு 18ஆம் திகதியிடப்பட்ட 2001ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க பணிப்புரைகளைத் திருத்தி, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு வைத்திருப்போருக்கான கடன்வசதிகள் மீது 2023ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| 2023 திசெம்பர் 20 | - | கட்டளைத் திகதியிலிருந்து தொடங்குகின்ற ஆறு மாதங்களுக்காக ஏற்கனவே வழங்கப்பட்ட கட்டளைகள் மூலம் விதிக்கப்பட்ட வெளிமுக மூலதன மற்றும் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் இடைநிறுத்தல்கள்/ வரையறைகள் சிலவற்றை முன்னேற்றகரமாகத் தளர்த்தி, 2338/40ஆம் இலக்க 2023 யூன் 28ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட கட்டளைகளை இரத்துச்செய்வதன் மூலம் 2363/26 ஆம் இலக்க 2023 திசெம்பர் 20ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழான கட்டளை வழங்கப்பட்டது. |
| 2024 சனவரி 01 | - | 2024 யூன் 30 வரை அதே செல்லுபடியாகும் தன்மையினை நீடிப்பதன் மூலம் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துவதற்கு விசேட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் - முதலீட்டைப்பெறுபவர் மீது 2023 பெப்புருவரி 27ஆம் திகதியிடப்பட்ட 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணிப்புரைகளைத் திருத்தி 2024ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணிப்புரைகள் வழங்கப்பட்டன. . |
| 2024 பெப்புருவரி 15 | - | மத்திய வைப்பக முறைமை (பிறைவட்) லிமிடெட்டின் மூலம் தொழிற்படுத்தப்பட்டு பேணப்படும் முறைமை தொடர்பில் பிணையங்களின் கடன்பெறுகை மற்றும் கடன்வழங்கலின் மூலமான கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட ஏதேனும் பிணையங்களின் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட குறுகிய கால விற்பனையை வசதிப்படுத்துவதற்கு திருத்தப்பட்டவாறு 2021 பெப்புருவரி 03ஆம் திகதியிடப்பட்ட 2213/35ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஒழுங்குவிதிகள், 2024 பெப்புருவரி 15ஆம் திகதியிடப்பட்ட 2371/33ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினால் மேலும் திருத்தப்பட்டன. |
| 2024 பெப்புருவரி 16 | - | மூன்று ஆண்டுகாலங்களை விடவும் குறையாத தவணையுடன் கூடிய தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளுக்கான வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு உடைமையாளர்களுக்கான கடன்களை வழங்குவதற்கான வசதியை நிறுத்திவைத்து, கடன்பாட்டாளர்களின் கடன்களை மீளச் செலுத்துவதற்கான வெளிநாட்டுச் செலாவணி நிலுவைகள்/காசுப் பாய்ச்சல்கள் கடன்பாட்டாளர்களுக்கு போதியளவின்மையின் போது இலங்கை ரூபாவாக மாற்றல்செய்யப்பட்ட வழிகளில் ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்ட அக்கடன்களின் மீள்கொடுப்பனவுகளை வசதிப்படுத்துவதற்கு திருத்தப்பட்டவாறு, 2021 |

பெப்புருவரி 03ஆம் திகதியிடப்பட்ட 2213/35ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஒழுங்குவிதிகள் 2024 பெப்புருவரி 16ஆம் திகதியிடப்பட்ட 2371/48ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் மேலும் திருத்தப்பட்டன.

- வருமானத்தை செலுத்துவதற்கு (பங்குலாபங்கள்/வட்டிகள்) இலங்கை ரூபாவிற்கு மாற்றல்செய்வதையும் முதலீட்டாளரின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் போதியதாக இல்லாத போது, பட்டியலிடப்பட்ட படுகடன் பிணையங்களின் அல்லது பட்டியலிடப்பட்ட பங்குகளின் முதிர்ச்சிப் பெறுகைகளையும் அனுமதிக்கும் வகையில், திருத்தப்பட்டவாறு, 2021 பெப்புருவரி 03ஆம் திகதியிடப்பட்ட 2213/35ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஒழுங்குவிதிகள் திருத்தப்பட்டு, 2024 பெப்புருவரி 16ஆம் திகதியிடப்பட்ட 2371/49ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினால் மேலும் திருத்தப்பட்டது.
- போதியளவான வெளிநாட்டுச் செலாவணி நிலுவைகள்/காசுப் பாய்ச்சல்கள் இல்லாதபோது, நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் கடன்பாட்டாளர்களிடம் கடன்களை மீளச்செலுத்துவதற்கான இலங்கை ரூபாவில் மாற்றல்செய்யும் இலங்கை அபிவிருத்தி முறிகள் ஆகியவற்றை முதலீடுசெய்யும் நோக்கத்திற்காக வெளிநாட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற கடன்களை மீளச்செலுத்துவதை வசதிப்படுத்தும் வகையில், 2021 யூன் 30ஆம் திகதியிடப்பட்ட 2234/20ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க ஒழுங்குவிதிகள் 2024 பெப்புருவரி 16ஆம் திகதியிடப்பட்ட 2371/50ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் நீக்கப்பட்டு பதலீடு செய்யப்பட்டது.

2024 மாச்சு 20

- 2024 பெப்புருவரி 15ஆம் திகதியிடப்பட்ட 2371/33ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துவதற்கு தொடர்புடைய பந்திகளை உட்சேர்ப்பதன் மூலம் 2021 மாச்சு 18ஆம் திகதியிடப்பட்ட உள்முக முதலீட்டுக் கணக்குகள் மீதான 2021ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பணிப்புரைகள் 2024 மாச்சு 20ஆம் திகதியிடப்பட்ட 2024ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க பணிப்புரைகளின் மூலம் திருத்தப்பட்டன. மேலும், இலங்கை ரூபாவை வெளிநாட்டு நாணயமாக மாற்றுவதன் மூலம் வருமானம் மற்றும் அல்லது மூலதனப் பெறுகைகளை செலுத்துவதற்கு முதலீட்டாளர்களை அல்லது வழங்குநர்களை

அனுமதிக்கும் வகையில் 2021ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பணிப்புரையிலுள்ள பந்தியானது 2024ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க பணிப்புரையின் மூலம் இரத்துச்செய்யப்பட்டது [வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்து கிடைக்கப்பெற வேண்டிய உள்முக முதலீட்டு கணக்குகள் மீதான பணிப்புரைகளின் 5(ஈ)(ii)ஆம் அனுமதிக்கப்பட்ட பற்றின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளுடன் தொடர்புடையது (அதாவது முதலீட்டாளரின் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கான முதலீட்டின் பெறுகைகளை மாற்றுதல்) ]

- வெளிநாட்டு கடன்ஈவோன்களிடமிருந்து வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு உடைமைகளின் குறுகிய கால கடன்பாடுகளை வசதிப்படுத்தலை இரத்துச்செய்யும் வகையில் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு உடைமையாளர்களுக்கான வசதிகள் மீதான 2024ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கப் பணிப்புரை 2021ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கப் பணிப்புரையை திருத்தும் வகையில் வழங்கப்பட்டன
- 2024 பெப்புருவரி 16ஆம் திகதியிடப்பட்ட 2371/49ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை இசைந்துசெல்லும் வகையில் 2021 யூலை 30ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க பணிப்புரைகளைத் திருத்தும் வகையில் கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் வெளிநாட்டு நாணயம் பெயர்குறிக்கப்பட்ட முதலீடுகளை வசதிப்படுத்துவதற்கு சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீதான 2024ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

**படுகடன் முகாமைத்துவம்**

2023 பெப்புருவரி 13 - நேரடி வழங்கல் தள ஏற்பாட்டின் கீழ் இலங்கை அபிவிருத்தி முறிகளை வழங்குதல் இடைநிறுத்தப்பட்டது.

2023 மாச்சு 16 - "2023ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்கு மற்றும் பிணையங்கள்" (தகவலை வெளிப்படுத்தல்) ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன.

2023 ஏப்பிறல் 04 - சாதாரண கட்டம் II கால இடைவெளியின் போது மத்திய வங்கியின் நாணயக் கொள்கை அறிவித்தல் அறிவிக்கப்படமாலிருக்கும் சந்தர்ப்பங்களில், திறைசேறி உண்டியல் ஏலமொன்றிற்குப் பின்னர் உடனடியாக ஒரு மணித்தியால காலப்பகுதியில் அல்லது ஏல நாளில் தொழிலை முடிவுறுத்தும் காலப்பகுதியில், எது இறுதியாக இடம்பெறுகின்றதோ அது, குறித்த திறைசேரி உண்டியல் ஏலத்தின் கட்டம் II இல் நிறைவேற்றப்படுகின்றது.

2023 மே 12 - 1923ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் திறைசேரி உண்டியல்கள் வழங்கலை மட்டுப்படுத்தலை ரூ. 5,000 பில்லியனிலிருந்து ரூ. 6,000 பில்லியன் வரை அதிகரிப்பதற்கான தீர்மானமொன்றிற்கு பாரளுமன்றத்தால் ஒப்புதலளிக்கப்பட்டது.

2023 யூன் 19 - 2023 யூன் 19 அன்று தொடர்பான பணிப்புரைகளை வெளியிடுவதன் மூலம் புதிய வலைத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட திறைசேரி உண்டியல் வழங்கல் முறைமை 2023 யூன் 21 அன்று நடைமுறைக்கு வரும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

2023 யூலை 04 - இலங்கையின் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை தொடர்பான கொள்கையொன்றை நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு அறிவித்தது. இக்கொள்கையானது பன்னாட்டு நாணய நிதியத்துடன் ஒப்புதலளிக்கப்பட்ட படுகடன் நிலைபெறுதன்மை இலக்குகளைப் பூர்த்திசெய்வற்கு பங்களிப்புச்செய்வதற்கு, விரிவாக்கப்பட்ட நிதிய வசதியுடன் ஒத்திசைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்படுகடன் மேம்படுத்துகை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது,

- 1937ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) கீழ் வழங்கப்பட்டுள்ள திறைசேரி முறிகளை, சில தகைமையுடைய திறைசேரி முறிகள் உடமையாளர்களுக்காக பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ள புதிய திறைசேரி முறிகளாக மாற்றுதல்/பரிமாற்றுதல்,
- 1923ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) கீழ் வழங்கப்பட்டுள்ள மற்றும் மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படுகின்ற திறைசேரி உண்டியல்களைப் பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் திறைசேரி முறிகளாக மாற்றுதல்,
- மத்திய வங்கியினால் இலங்கை அரசாங்கத்திற்கு மேற்கொள்ளப்படும் தற்காலிக முற்பணங்களைப் பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் திறைசேரி முறிகளாக மாற்றுதல்,
- 1957ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க வெளிநாட்டுக் கடன்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வெளிநின்ற இலங்கை அபிவிருத்தி முறிகளை ஐக்கிய அமெரிக்க டொலரில்

பெயர்குறித்துரைக்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் திறைசேரி முறிகளாகப் பரிமாற்றுதல் அல்லது அரசாங்கத்தின் உள்நாட்டுச் சட்ட வெளிநாட்டு நாணயத்தில் பெயர்குறித்துரைக்கப்பட்ட வங்கிக் கடன்களை மறுசீரமைத்தல்.

2023 யூலை 19 - திறைசேரி முறிப் பரிமாற்ற விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரிமாற்ற திறைசேரி முறிகளுக்கான அழைப்பின் முடிவுறுத்தல் திகதி, அறிவித்தல் திகதி, மற்றும் தீர்ப்பனவு திகதி போன்றன முறையே, 2023 ஓகத்து 11, 2023 ஓகத்து 16 மற்றும் 2023 ஓகத்து 17 வரை நீடிக்கப்பட்டன.

இலங்கை அபிவிருத்தி முறி பரிமாற்று விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரிமாற்று இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கான அழைப்பின் தீர்ப்பனவு திகதி 2023 ஓகத்து 15 அன்று நீடிக்கப்பட்டது.

2023 ஓகத்து 11 - திறைசேரி முறிப் பரிமாற்று விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரிமாற்று திறைசேரி முறிகளுக்கான அழைப்பின் காலாவதித் திகதி, அறிவித்தல் திகதி மற்றும் தீர்ப்பனவுத் திகதி முறையே 2023 ஓகத்து 28, 2023 ஓகத்து 29 மற்றும் 2023 ஓகத்து 31 வரை மேலும் நீடிக்கப்பட்டது.

2023 ஓகத்து 15 - உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கான பரிமாற்று விஞ்ஞாபனத்தின் பிரகாரம், தீர்ப்பனவு 2023 ஓகத்து 15 அன்று முன்னெடுக்கப்பட்டது. இலங்கை ரூபா பெயர்குறிக்கப்பட்ட முறிகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட தகைமையுடைய இலங்கை அபிவிருத்தி முறி உடைமையாளர்களுக்கு ரூ.252.2 பில்லியன் கொண்ட தொகை அவற்றின் தொடர்புடைய இலங்கை ரூபா முறிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. மேலும், திரட்டப்பட்ட மற்றும் நிலுவை வட்டி அதே முதலீட்டாளர்களுக்கு இலங்கை ரூபா நாணயத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

2023 ஓகத்து 21 - 2022ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2(1)(ஆ)ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம், அரசாங்கத்தின் உயர்ந்தபட்ச கடன்பெறுகை எல்லையை ரூ. 4,979.0 பில்லியனிலிருந்து ரூ. 13,979.0 பில்லியனிற்கு திருத்துவதற்கான ஒதுக்கீட்டு (திருத்தம்) சட்டமூலத்திற்கு பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டது.

2023 ஓகத்து 25 - திறைசேரி முறி பரிமாற்று விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரிமாற்று திறைசேரி முறிகளுக்கான அழைப்பின் காலாவதித் திகதி, அறிவித்தல் திகதி மற்றும் தீர்ப்பனவு திகதி போன்றன முறையே 2023 செத்தெம்பர் 11, 2023 செத்தெம்பர் 12 மற்றும் 2023 செத்தெம்பர் 14 தினங்களில் மேலும் நீடிக்கப்பட்டு, 2023 செத்தெம்பர் 01 அன்று முதிர்ச்சியடைந்த இரு திறைசேரி முறிகள் தகைமையுடைய முறிகளின் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன.

2023 செத்தெம்பர் 14 - உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் திறைசேரி முறிகளுக்கான பரிமாற்று விஞ்ஞாபனத்தின் பிரகாரம், திறைசேரி முறிகள் பரிமாற்று தீர்ப்பனவு முன்னெடுக்கப்பட்டது. புதிய திறைசேரி முறிகளினுள் மாற்றல்செய்யப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட முன்வைப்புக்கள் ரூ. 3,204.5 பில்லியனாகக் காணப்பட்டு, நீண்டகால முதிர்வுகளைக் கொண்டிருந்தது. மேலும், ரூ.110.9 பில்லியனைக் கொண்ட ஒன்றுசேர்ந்த வட்டி முதலீட்டாளர்களுக்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட திறைசேரி முறி தொகை செலுத்தப்பட்டது.

2023 செத்தெம்பர் 20 - 2023 செத்தெம்பர் 20 அன்று தொடர்புடைய பணிப்புரைகளை வெளியிடுவதுடன் 2023 செத்தெம்பர் 25 அன்று தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் திறைசேரி முறிகளுக்கான நேரடி வழங்கல் தளத்திற்கான புதிய வெப் அடிப்படையிலான முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

2023 செத்தெம்பர் 21 - மத்திய வங்கியிலிருந்து அரசாங்கத்திற்கு ரூ.344.7 பில்லியன் கொண்ட வெளிநின்ற கொடுகடன்கள் ("தற்காலிக முற்பணங்கள்") முதலாந்தரச் சந்தையில் இலங்கை மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்படும் அரசாங்கத்தின் ரூ.2,368.4 பில்லியன் கொண்ட வெளிநின்ற திறைசேரி உண்டியல்கள் ரூ.2,492.3 பில்லியன் கொண்ட இலங்கை ரூபாவில் பெயர்குறிக்கப்பட்ட பத்து (10) புதிய கிரமமாக குறைவடையும் (Step-down) நிலையான கூப்பன் திறைசேரி முறிகளாக மற்றும் ரூ.220.8 பில்லியன் கொண்ட பன்னிரண்டு (12) ஏற்கனவேயுள்ள திறைசேரி உண்டியல்களாக மாற்றம்செய்யப்பட்டு, 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 129(2)ஆம் பிரிவு மற்றும் 2023ஆம் 12ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் (திருத்தம்) நியதிகளில், 2023 செத்தெம்பர் 21 அன்று தீர்ப்பனவுசெய்யப்பட்டது.

2023 நவெம்பர் 03 - 2023 ஓகத்து 18 அன்று கைச்சாத்திடப்பட்ட மக்கள் வங்கியின் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவின் கடன் நிலுவையின் மறுசீரமைப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் மக்கள் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவு கடன் பரிமாற்றமானது

மக்கள் வங்கிக்காக நிறைவேற்றப்பட்டது. ரூ.27.7 பில்லியன் கொண்ட கடன் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகையின் கீழ் வழங்கப்பட்ட ஐந்து ஏற்கனவேயுள்ள திறைசேரி முறிகளுக்கு ஒதுக்கீடுசெய்யப்பட்டன.

2024 மாச்சு 11 - 2024 மாச்சு 07 அன்று வழங்கப்பட்ட திருத்தப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளில், திரண்ட ஏலப் பற்றாக்குறைக்கு குறைக்கப்பட்டுள்ள திறைசேரி உண்டியல் ஏலங்களின் கட்டம் IIஇல் வழங்கப்பட்ட தொகை மற்றும் 10 சதவீதம் கொண்ட வழங்கப்பட்ட மொத்த தொகை அல்லது ரூ.5.0 பில்லியன் இதில் எது உயர்வாக இருக்கின்றதோ அது, 2024 மாச்சு 11 தொடக்கம் நடைமுறைக்கு வந்தது.

- 2024 மாச்சு 07 அன்று வழங்கப்பட்ட திருத்தப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளில் கட்டம் Iஇல் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பன்னாட்டு அடையாள இலக்கங்களிடமிருந்து வழங்கப்பட்ட 10 சதவீதம் கொண்ட தொகைக்கு குறைக்கப்பட்டுள்ள திறைசேரி ஏலங்களைக் கொண்ட நேரடி வழங்கல் தளத்தில் வழங்கப்பட்ட தொகையானது 2024 மாச்சு 11 தொடக்கம் நடைமுறைக்கு வந்தது.

**நிதியியல் துறை**

**உரிமம்பெற்ற வங்கிகள்**

2023 சனவரி 02 - மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அண்மைய கிடைக்கப்பெறும் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதத்திற்கு இசைவாக +300 அடிப்படைப் புள்ளிகளின் எல்லையொன்றுடன் முற்பணம் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதத்தை சீராக்கும் வகையில் 2023 சனவரி 03 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

2023 சனவரி 31 - பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ் திரவத்தன்மை காப்பு விகிதம் மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளில் வரையறுக்கப்பட்டதற்கமைவாக, நிதியல்லா கூட்டாண்மைப் படுகடன் பிணையங்களைத் தகுதிப்படுத்தலையும் நிதியல்லா பொது மூலதனப் பங்குரிமை பங்குகளை தகுதிப்படுத்தலையும் தீர்மானிக்கும் வகையில் வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் விடுக்கப்பட்டு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் நியதி திரவச் சொத்து விகிதத்தின் கணிப்பீட்டில் திரவச் சொத்துக்களாகக் கருதப்பட வேண்டும்.

2023 பெப்புருவரி 02 - நிலவும் பேரண்டப் பொருளாதார நிலைமைகளையும் உரிமம்பெற்ற வங்கிகளின் நிலைபெறத்தக்க தன்மையை உறுதிப்படுத்துவதற்கு திரவத்தன்மை மற்றும் மூலதனத்தின் பொருத்தமான மட்டத்தைப் பேணுவதன் முக்கியத்துவத்தையும் கருத்திற்கொண்டு, உரிமம்பெற்ற

வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகளை கட்டுப்படுத்தும் வகையில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

2023 பெப்புருவரி 16 - 2022 மே 19 திகதியிடப்பட்ட கட்டளையினால் உள்ளடக்கப்பட்ட ஏற்கனவேயுள்ள இணங்குவிப்பு குறியீடுகளுக்கு மேலதிகமாக, புதிதாக சேர்க்கப்பட்ட 64 இணங்குவிப்பு குறியீடுகளுக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான 100 சதவீத காசு எல்லை வைப்புத் தேவைப்பாட்டினைப் பேணுவது தொடர்பில் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் கட்டளையொன்று விடுக்கப்பட்டது.

2023 பெப்புருவரி 17 - இறக்குமதிகளுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள் மீதான 2022ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கான திருத்தமொன்று 64 புதிய இணங்குவிப்புக் குறியீடுகளுக்கான குறிப்பிடப்பட்ட பணிப்புரையின் ஏற்புடைத்தன்மையை நீடிக்கும் வகையில் வழங்கப்பட்டது.

2023 மாச்சு 07 - நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளினதும் தனிநபர்களினதும் தொழிலை/ வருமானத் துறைகளை மீட்டெடுப்பதற்கான இயலாற்றலைக் கொண்டு அவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு பொருத்தான சலுகைகளை வழங்குமாறு உரிமம்பெற்ற வங்கிகள் கோரப்பட்டன.

2023 ஏப்பிறல் 21 - இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டவாறு 2023 சனவரி 31 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் இலங்கையில் ஐசிஆர்ஏ லங்கா லிமிடெட்டின் வியாபாரத் தொழிற்பாடுகள் நிறுத்தப்பட்டதன் விளைவாக, உரிமம்பெற்ற வங்கிகளுடன் தொடர்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் நோக்கங்களுக்கான தகைமையுடைய/ஏற்றுக்கொள்ளத்தக்க கொடுகடன் தரப்படுத்தல் முகவராண்மையொன்றாக ஐசிஆர்ஏ லங்கா லிமிடெட்டை அங்கீகரிப்பதை நிறுத்துமாறு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சுற்றறிக்கை வழங்கப்பட்டது.

2023 ஏப்பிறல் 25 - உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள் தொடர்பில் 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் வழங்கப்பட்டன. இதற்கமைவாக, எடுத்துக்காட்டப்பட்ட தேவைப்பாடுகளை நிறைவேற்றாமல், முதன்மை நிறைவேற்று அலுவலர்கள், முக்கிய முகாமைத்துவ ஆளணிகளின் முகாமைத்துவ கொடுப்பனவுகளையும் பணிப்பாளர் சபைக்கான கொடுப்பனவுகளையும் அதிகரிக்கப்பதிலிருந்து தவிர்ந்துகொள்ளுமாறு உரிமம்பெற்ற வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன.

2023 மே 17 - 2022 மே 19 மற்றும் 2023 பெப்புருவரி 16 அன்று விதிக்கப்பட்ட நாணயக் கடிதத்திற்கு எதிரான குறைந்தபட்ச காசு எல்லை வைப்புத் தேவைப்பாடுகளை மீளப்பெறுவதற்கு சுற்றறிக்கை வழங்கப்பட்டது.

2023 மே 18 - இறக்குமதிகளுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள் மீதான 2022ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளையும் 2023ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளையும் இரத்துச்செய்யுமாறு, வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

2023 ஓகத்து 25 - குறித்த கடன்வழங்கல் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களைக் குறைத்து இலக்கிடப்பட்ட தினங்களில் குறித்த சதவீதங்களின் மூலம் புதிய மற்றும் ஏற்கனவேயுள்ள ரூபாய் பெயர்குறிக்கப்பட்ட கடன்வழங்கல் சாதனங்களின் வட்டி வீதங்களைக் குறைக்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளை கேட்டுக்கொள்ளும் விதமாக, உரிமம்பெற்ற வங்கிகளின் இலங்கை ரூபா பெயர்குறிக்கப்பட்ட கடன்வழங்கல் சாதனங்கள் மீதான ஏற்புடைய வட்டி வீதங்கள் தொடர்பில் நாணய விதிச் சட்டக் கட்டளை வழங்கப்பட்டது.

2023 நவெம்பர் 15 - 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டமானது 2023 செத்தெம்பர் 14 அன்று பாராளுமன்றத்தினால் உறுதிப்படுத்தப்பட்டு 2358/46ஆம் இலக்க வர்த்தமானியில் கட்டளையின்படி வெளியிடப்பட்டதுடன், மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் 2023 நவெம்பர் 15 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் தொழிற்பாட்டிற்கு வந்தது.

- 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் விசேட ஏற்பாடுகளின் சட்டப் பணிப்புரைகள் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் உறுப்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

2023 நவெம்பர் 23 - 2024 மற்றும் 2025ஆம் ஆண்டுகளுக்கான ஏற்புடைய புதிய உரிமக்கட்டண கட்டமைப்பினை அறிவிக்கும் விதமாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஆண்டிற்கான உரிமக் கட்டணம் தொடர்பான வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் வழங்கப்பட்டது.

2023 நவெம்பர் 27 - வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட தீர்மானங்கள் 2360/02ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் கீழ் பொது மக்களுக்கு வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 2023 திசெம்பர் 08 | - | மூன்றாந் தரப்பினர் பணி வழங்குநர்களை அங்கீகரித்தல், முக்கிய தகவல் முறைமைகளை இனங்காணுதல், தகவல் முறைமை உட்கட்டமைப்பின் உடைமை மற்றும் முகாமைத்துவத்தைத் தீர்மானித்தல் போன்றவற்றுடன் தொடர்புடைய குறித்த தேவைப்பாடுகளை திருத்தும் வகையில், உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தாக்குப்பிடிக்கும்தன்மை மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு தொடர்பான 2021ஆம் 16ஆம் இலக்க வங்கித்தொழில் பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் வழங்கப்பட்டன. மேலும், நிலவிய அசாதாரண சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, பொது காலக்கெடுக்களும் குறித்த காலவரையறைகளும் நீடிக்கப்பட்டன. |
| 2024 பெப்புருவரி 29 | - | பிரைஸ்வோட்டர்ஹவுஸ் கூப்பர்ஸ் மற்றும் எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ் போன்றன முறையே மேலே குறிப்பிடப்பட்ட பெயர்கள் டெலோய்ட் பார்ட்னர்கள் மற்றும் டெலோய்ட் அசோசியேட்ஸ்களாக என்ற மாற்றங்களுடன், “உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு தகைமையுடைய கணக்காய்வாளர்களின் பட்டியல்” மீதான 2019ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான திருத்தங்கள் வழங்கப்பட்டன. |
| 2024 மாச்சு 25 | | வங்கித்தொழில் துறையின் பாதுகாப்பு மற்றும் ஆற்றல்வாய்ந்ததன்மையை உறுதிப்படுத்தும் வகையில், கொடுகடன் திரட்சி இடர்நேர்வுகளைத் தணிப்பதை நோக்காகக் கொண்டு, 2026 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு, “உரிமம்பெற்ற வங்கிகளின் பாரியளவிலான வெளிப்படுத்துகை” தொடர்பான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2024 மாச்சு 28 | - | அசாதாரண பேரண்டபொருளாதார சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களின் நிலைபெறத்தக்க மீட்பினை வசதிப்படுத்தி, உரிமம்பெற்ற வங்கிகளின் சொத்துத்தரத்தை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு, ‘‘உரிமம்பெற்ற வங்கிகளின் வியாபார மீட்புப் பிரிவுகளை தாபிப்பதற்கான வழிகாட்டல்கள்’’ மீதான சுற்றறிக்கை வழங்கப்பட்ட அதேவேளை வியாபார மீட்புப் பிரிவுகளாக உரிமம்பெற்ற வங்கிகளின் கொவிட்-19இற்கு பின்னர் ஏற்கனவே தாபிக்கப்பட்டுள்ள மீட்புப் பிரிவுகளை வலுப்படுத்தி மீளஉருவாக்கப்பட்டுள்ளன. |
| இனிவரவிருப்பவை | - | வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம்<br>கம்பனி ஆளுகை மீதான திருத்தப்பட்ட பணிப்புரைகள் |

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனி, உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகள்**

2023 சனவரி 05 - பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் அத்துடன் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைய மத்திய வங்கியின் நாணயச் சபையானது மத்திய வங்கியினால் நடாத்தப்பட்டு வருகின்ற விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும் பொருட்டு 2023 சனவரி 05ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக முதனிலை வணிகர் ஒருவரின் தொழில் மற்றும் நடவடிக்கைகளை கொண்டுநடாத்துவதிலிருந்து பெர்பசுவல் டெஸரீஸ் லிமிடெட்டின் இடைநிறுத்தலை நீடித்தது.

2023 சனவரி 18 - 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடும் சட்டத்தின் 9.1(ஏ) பிரிவின் நியதிகளுக்கமைய பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனமொன்றாக சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் பதிவு இரத்துச்செய்யப்பட்டுள்ளது.

2023 சனவரி 31 - வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களை ஒன்றிணைக்கும் முதன்மைத் திட்டத்தின் பாகமொன்றாக எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சியுடன் எல்ஓஎல்சி டெவலெப்மன்ட் பினான்ஸ் பிஎல்சியை ஒன்றிணைப்பதைத் தொடர்ந்து, மத்திய வங்கியின் நாணயச் சபையானது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் நிதித் தொழிலை முன்னெடுக்கும் பொருட்டு எல்ஓஎல்சி டெவலெப்மன்ட் பினான்ஸ் பிஎல்சிக்கு வழங்கிய உரிமத்தை இரத்துச்செய்துள்ளது. மேலும், நிதி குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட எல்ஓஎல்சி டெவலெப்மன்ட் பினான்ஸ் பிஎல்சியின் பதிவானது வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரினால் இரத்துச்செய்யப்பட்டுள்ளது.

- போதியளவு மூலதனத்தைப் பேணுவதன் மூலம் நிச்சயமற்ற நேரத்தில் எழக்கூடிய பொருளாதார அதிர்ச்சிகளை ஈர்த்துக்கொள்வதற்கும் வாடிக்கையாளர்களின் கொடுகடன் தேவைகளை தொடர்ச்சியாக ஆதரவளிப்பதற்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தாக்குப்பிடிக்கும் தன்மையையும் இயலாற்றலையும் வலுப்படுத்துவதற்காக பங்கிலாபங்களைப் பிரகடனப்படுத்தல் அல்லது இலாபங்களை மீள அனுப்புதல் மீதான வழிகாட்டல் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு விடுக்கப்பட்டுள்ளது.

2023 பெப்புருவரி 02 - குறிப்பிட்ட நோக்கங்களுக்காக ஐசிஆர்ஏ லங்கா லிமிடெட்டானது ஏற்றுக்கொள்ளப்பட்ட கடன் தர மதிப்பீட்டு நிறுவனமாக

நீக்கப்பட்டுள்ளதாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| 2023 பெப்புருவரி 08 | - | நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கு உட்பட்டு, நிதித்தொழில் சட்டத்தின் கீழ் நாணயச் சபையினால் 2018 யூலை 25 அன்று உரிமம் இரத்துச்செய்யப்பட்ட த ஸ்டான்டட் கிரெடிற் பினான்ஸ் லிமிடெட்டிற்கு கலைப்பாளரை நியமிக்க கொழும்பு வர்த்தக உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. |
| 2023 மாச்சு 03 | - | தற்போது நிலவுகின்ற பேரண்ட பொருளாதார நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் பொருத்தமான சலுகைகளை வழங்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. |
| 2023 மாச்சு 21 | - | நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கு உட்பட்டு, நிதித்தொழில் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியின் நாணயச் சபையினால் 2020 மே 22 அன்று உரிமம் இரத்துச் செய்யப்பட்ட த பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டிற்கு கலைப்பாளரை நியமிக்க கொழும்பு வர்த்தக உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. |
| 2023 ஏப்பிறல் 25 | - | மத்திய வங்கியின் நாணய சபையின் வழிகாட்டலின்படி 2023 ஏப்பிறல் 25 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் நிதித் தொழில் சட்டத்தின் 37 (1) ஆம் பிரிவின் கீழ் பிம்புத் பினான்ஸ் பிஎல்சிக்கு உரிமத்தை இரத்துச்செய்தல் தொடர்பான அறிவித்தலை வழங்கியுள்ளது. |
| 2023 யூன் 09 | - | நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கு உட்பட்டு, நிதித்தொழில் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியின் நாணயச் சபையினால் 2018 மாச்சு 05 அன்று உரிமம் இரத்துச் செய்யப்பட்ட சென்ட்ரல் இன்வெஸ்ட்மென்ட் அண்ட் பைனான்ஸ் லிமிடெட்டிற்கு கலைப்பாளரை நியமிக்க கொழும்பு வர்த்தக உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. |
| 2023 யூலை 05 | - | பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் அத்துடன் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைய மத்திய வங்கியின் நாணயச் சபையானது மத்திய வங்கியினால் நடாத்தப்பட்டு வருகின்ற விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும் பொருட்டு 2023 யூலை 05ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக முதனிலை வணிகர் ஒருவரின் தொழில் மற்றும் நடவடிக்கைகளை கொண்டுநடாத்துவதிலிருந்து பெர்பசுவல் டெஸரீஸ் லிமிடெட்டின் இடைநிறுத்தலை நீடித்தது. |

| | |
|---|---|
| 2023 யூலை 31 | - முதன்மைத் திட்டத்தின் பாகமொன்றாக கன்றிச் பைனான்ஸ் லிமிடெட் 2023 யூலை 31 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் நேஷன் லங்கா பைனான்ஸ் பிஎல்சியுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்துள்ள நிறுவனம் நேஷன் லங்கா பைனான்ஸ் பிஎல்சி ஆகும். |
| 2023 செத்தெம்பர் 01 | - பிம்புத் பினான்ஸ் பிஎல்சி எதிர்கொண்ட நெருக்கடி நிலைமைகளை மீட்பதற்கு திருப்திகரமான முன்னேற்றம் எதுவும் மேற்கொள்ளாமையினால் பிம்புத் பினான்ஸ் பிஎல்சிக்கு நிதித்தொழிலை கொண்டுநடத்துவதற்காக வழங்கப்பட்ட உரிமத்தை மத்திய வங்கியின் நாணய சபையின் வழிகாட்டலின்படி 2023 செத்தெம்பர் 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் இரத்துச்செய்யப்பட்டுள்ளது. |
| 2023 திசெம்பர் 15 | - நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கு உட்பட்டு, நிதித்தொழில் சட்டத்தின் கீழ் ஈரிஜ பைனான்ஸ் லிமிடெட்டிற்கு கலைப்பாளரை நியமிக்க கொழும்பு வர்த்தக உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. |
| 2024 சனவரி 05 | - பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் அத்துடன் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைய மத்திய வங்கியானது மத்திய வங்கியினால் நடாத்தப்பட்டு வருகின்ற விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும் பொருட்டு 2024 சனவரி 05ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக முதனிலை வணிகர் ஒருவரின் தொழில் மற்றும் நடவடிக்கைகளை கொண்டுநடாத்துவதிலிருந்து பெர்பசுவல் டெஸரீஸ் லிமிடெட்டின் இடைநிறுத்தலை நீடித்துள்ளது. |
| 2023 பெப்புருவரி 13 | - உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வியாபாரம் மற்றும் கூட்டாண்மை அலுவல்கள் முன்னெடுக்கப்படும் முறை அல்லது வேறு ஏதேனும் நோக்கத்தை உறுதிப்படுத்தும் வகையில், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தகவல்களை உரிய காலத்திலும், துல்லியமாகவும், சீராகவும் மற்றும் முழுமையாகப் பெற்றுக்கொள்வதை குறிக்கோளாகக் கொண்டு, காலாந்திர அறிக்கையிடல் தேவைப்பாடுகள் மீதான பணிப்புரையொன்று வழங்கப்பட்டது. |
| இனிவரவிருப்பவை | - நடுத்தர காலத்தில் சிறிய மற்றும் நடுத்தரளவிலான உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் நீண்டகால நிலைபெறும் தன்மையினை உறுதிசெய்யும் முதன்மைத் திட்டத்தின் கட்டம் II இனை நடைமுறைப்படுத்தல். |

- நடப்பு சந்தை அபிவிருத்திகளுக்கமைவாக நிதித்தொழில் சட்டம் மற்றும் நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டம் என்பவற்றிற்கான திருத்தங்கள் உள்ளடங்கலாக தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினைத் திருத்தம்செய்தல்.
- வங்கியல்லாத் துறையின் உறுதிப்பாட்டினை மேம்படுத்துகின்ற அதேவேளை மேற்பார்வை மீளாய்வுச் செயன்முறையினை வலுப்படுத்துவதற்கு விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளைக் கொண்டுவருதல்.

**காப்புறுதி** [2]

2023 ஏப்பிறல் 24 - கொள்கை உடைமையாளர்களின் நலனைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் வழங்கப்படும் பொது காப்புறுதிச் சாதனங்களின் கொள்கை ஆவணங்களின் அத்தியாவசிய கூறுகளுக்கான கட்டமைப்பொன்றை தயாரிப்பதற்கு வழிகாட்டலொன்று விடுக்கப்பட்டது.

2023 யூன் 19 - கோரல்கள் ஏற்பட்டால், சராசரி மோட்டார் வாகனக் காப்புறுதி கொள்கைகள் தொடர்பில் பொது காப்புறுதி நிறுவனங்களின் தற்போதைய நடைமுறைகளைக் கருத்திற்கொண்டு, அனைத்து பொது காப்புறுதி நிறுவனங்களுக்கும் 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணிப்புரை விடுக்கப்பட்டது.

2023 யூலை 25 - 1ஆம் இலக்க பணிப்புரையின் விடயத்தின் சொற்பதங்களைப் பதிலீடு செய்வதற்கு 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணிப்புரைக்கான தெளிவுபடுத்தல் விடுக்கப்பட்டது.

2023 யூலை 27 - காப்புறுதி நிறுவனங்களினதும் காப்புறுதி தரகு நிறுவனங்களினதும் முதன்மை அலுவலர்கள் தொடர்பில் 2023ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க பணிப்புரையானது 2021 திசெம்பர் 16ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க பணிப்புரை மற்றும் 2017 திசெம்பர் 04ஆம் திகதியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிப்புரைக்கு பதிலீடாக வெளியிடப்பட்டது.

2023 செத்தெம்பர் 01 - 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதி தொழிற்துறை சட்டத்தின் ஒழுங்குவிதியின் 33 ஆ(1) ஆம் பிரிவுடன் இணங்கியொழுகும் விதத்தில் காப்புறுதியாளர்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய படிவத்தையும் சத்தியக்கடதாசிகளையும் திருத்தியமைப்பதற்கு 13ஆம் இலக்கத் தீர்மானத்திற்கான திருத்தம் வழங்கப்பட்டது.

[2] இக்கொள்கை வழிமுறைகள் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளாகும்.

2023 செத்தெம்பர் 09 - குறுகியகால பொது காப்புறுதி கொள்கைகளின் கட்டுப்பண கொடுப்பனவிற்காக பயணக் காப்புறுதி, கடல்சார் காப்புறுதி, தலைப்புக் காப்புறுதி மற்றும் காப்புறுதி நிறுவனங்களால் வழங்கப்படும் முறிகளுக்கு கடன் வழங்கப்படமாட்டாது என்ற அடிப்படையில் கட்டுப்பணம் செலுத்தும் உத்தரவாதப் பிரிவின் கட்டுப்பணக் கொடுப்பனவின் ஏற்புடைத்தன்மை நீங்கலாக, அதைத் திருத்தும் வகையில், 25ஆம் இலக்க சுற்றறிக்கையைத் திருத்துவதற்கு 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை வழங்கப்பட்டது

2023 செத்தெம்பர் 27 - 2002 ஒத்தோபர் 30ஆம் திகதியிடப்பட்ட 07ஆம் இலக்க, 2008 பெப்புருவரி 08ஆம் திகதியிடப்பட்ட 08ஆம் இலக்க மற்றும் 2018 ஓகத்து 13ஆம் திகதியிடப்பட்ட 09ஆம் இலக்க இரத்துச்செய்யப்பட்ட தீர்மானங்களைப் பதிலீடுசெய்யும் வகையில் 2023 செத்தெம்பர் 25ஆம் திகதியிடப்பட்ட 07ஆம், 08ஆம் மற்றும் 09ஆம் இலக்க தீர்மானங்கள் வழங்கப்பட்டன.

2024 சனவரி 08 - சுற்றறிக்கை இல.30 மற்றும் 35இனை இரத்துச்செய்து, அதன் தேவைப்பாடுகளை ஒருங்கிணைக்கும் வகையில் ‘மதிப்பீட்டாளர்களுக்கான தகைமையுடைய பிரமாணம்’ தொடர்பான 2024ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை வழங்கப்பட்டது.

2024 சனவரி 09 - அறிக்கையிடல் தேவைப்பாடுகளுக்கு இணங்காமை மற்றும் காப்புறுதித் தொழிற்துறை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்காமை தொடர்பில் 41ஆம் இலக்க சுற்றறிக்கையை இரத்துச்செய்யும் வகையில் 2024ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க சுற்றறிக்கை வழங்கப்பட்டது.

2024 பெப்புருவரி 01 - உதவுதொகை கொள்கைகளின் குறைந்தபட்சக் காலப்பகுதியை மட்டுப்படுத்துவதற்கு 2024ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரை வழங்கப்பட்டது.

2024 பெப்புருவரி 08 - 2016 ஏப்பிறல் 07ஆம் திகதியிடப்பட்ட இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் 4ஆம் பந்திக்கமைவாக, இலங்கை காப்புறுதி நிறுவகத்திற்கு க.பொ.த சாதாரணதர மட்ட பரீட்சை பெறுபேறுகள் சரிபார்க்கப்படாத மற்றும் உறுதிப்படுத்தப்படாத தனிப்பட்டவர்களின் முகவராண்மை ஒப்பந்தங்களை இரத்துச்செய்வதற்கு அனைத்து காப்புறுதியாளர்களுக்கும் தரகர்களுக்கும் அவர்களை நெறிப்படுத்தும் விதத்தில் 2024ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

**மூலதனச் சந்தை**[3]

2023 சனவரி - கூட்டாண்மைப் படுகடன் பிணையங்கள் மீதான மீள்கொள்வனவு உடன்படிக்கை கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய திருத்தப்பட்ட கொடுக்கல்வாங்கல் கட்டணங்கள் தொடர்பாக நிதி அமைச்சினால் ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன.

2023 ஏப்பிறல் - உள்கட்டமைப்பு தொடர்பான புதிய தயாரிப்புக்களை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கு கொள்கையளவில் ஒப்புதல் பெறப்பட்டது.

கொழும்பு பங்கு பரிவர்த்தனை மற்றும் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு ஆகியவற்றினால் பசுமை முறிகளைச் செயல்படுத்துவதற்கான விதிகள் இறுதிப்படுத்தப்பட்டன.

2023 மே - கொழும்பு பங்கு பரிவர்த்தனை மற்றும் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு ஆகியவற்றினால் சுகுக் உற்பத்திகளைச் செயல்படுத்துவதற்கான விதிகள் இறுதிப்படுத்தப்பட்டு அவை நிபந்தனையுடன் அனுமதிக்கப்பட்டன.

2023 யூன் - உயர் விளைவு கூட்டாண்மை முறிகளை அறிமுகப்படுத்துவதற்கு கொள்கையளவில் ஒப்புதலளிக்கப்பட்டது.

- ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட குறுகியகால விற்றல் மற்றும் பிணையங்களை கடன்பெறுதல் மற்றும் கடன்வழங்குதல் ஆகியவற்றை செயல்படுத்துவதற்கான விதிகள் நிபந்தனையுடன் அனுமதிக்கப்பட்டன.

2023 ஓகத்து - பட்டியலிடப்பட்ட கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிறுவனங்களுக்கு விரிவாக்கப்பட்ட வியாபார அறிக்கையிடல் மொழி (எக்ஸ்பிஆர்எல்) அறிக்கையிடலை அறிமுகப்படுத்துவதற்கு ஒப்புதல் பெறப்பட்டது.

2023 செத்தெம்பர் - கொழும்பு பங்கு பரிவர்த்தனையினால் முன்மொழியப்பட்டவாறு கூட்டாண்மைப் படுகடன் கொடுக்கல்வாங்கலுக்கு ஏற்புடைய கொடுகடன் கட்டணங்களை கொடுக்கல்வாங்கல்களின் 1 அடிப்படை புள்ளிகளாக குறைப்பதற்கு ஒப்புதல் பெறப்பட்டது.

2023 ஒத்தோபர் - நீல முறிகளை செயல்படுத்துவதற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு கொழும்பு பங்கு பரிவர்த்தனையினால் இறுதிப்படுத்தப்பட்டு அதற்கு ஒப்புதல் பெறப்பட்டது.

2023 நவெம்பர் - ஷரியா மேற்பார்வைக் குழுவை அறிமுகப்படுத்துவதற்கான நியதிக் குறிப்பு இறுதிப்படுத்தப்பட்டது. அது ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும்

- பிணையங்களை கடன்பெறுதல் மற்றும் கடன்வழங்குதல் மூலமாக ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட குறுகியகால விற்றல் கொழும்பு பங்கு பரிவர்த்தனையினால் தொடங்கிவைக்கப்பட்டது.

[3]இக்கொள்கை வழிமுறைகள் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்பட்டவையாகும்

2023 திசெம்பர் - 2021ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனைச் சட்டத்தின் கீழ் "துணை பணி வழங்குநர்களாக" சுகுக் உற்பத்திகளின் ஷரியா இணங்கியொழுகுதலை உறுதிப்படுத்துகின்ற ஷரியா புலமையாளர்கள் அங்கீகரிக்கப்பட்டனர்.

2024 சனவரி - ஷரியா இணங்கியொழுகும் படுகடன் பிணையங்களுடன் தொடர்புடைய விதிகள் இறுதிப்படுத்தப்பட்டு ஷரியா புலமையாளர்களுக்கான வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டன.

- கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் உட்கட்டமைப்பு முறிகளை வழங்குவதற்கும் பட்டியலிடுவதற்கும் வசதியாக ஒழுங்குமுறை கட்டமைப்பிற்கான ஒப்புதல் பெறப்பட்டது.

**ஏனைய நிதியியல் துறையுடன் தொடர்புடைய கொள்கை வழிமுறைகள்**

2023 ஓகத்து 08 - நிதியியல் பணி வழங்குநர்களின் நியாயமான, வெளிப்படையான மற்றும் ஒழுக்கவியல் தொழில் நடத்தையை ஊக்குவித்து, சந்தை நடத்தைக்கான மேற்பார்வை மற்றும் நடைமுறைப்படுத்தலை வழங்கும் பொருட்டு, மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஏற்புடைய நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளின் நாணய விதிச் சட்டத்தின் 10(இ)ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டன.

2024 - உலக வங்கியின் நிதியியல் துறை பாதுகாப்பு வலை வலுப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் உலக வங்கிக் குழு, நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கியின் உறுப்பினராக விளங்கும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்புகளுக்கிடையில் கடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.

- 2024 சனவரி 31 – பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு மற்றும் நிதி அமைச்சுக்கிடையில் நிதியியல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.
- 2024 பெப்புருவரி 01 – பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு மற்றும் மத்திய வங்கிக்கிடையில் நிதியியல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.
- 2024 பெப்புருவரி 06 – நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கிக்கிடையில் துணை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

**இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள்**

2023 சனவரி 01

- இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமமொன்று தேவைப்படும் இறக்குமதிக்கான ஒன்றுதிரட்டப்பட்ட பொருட்பட்டியலுடனும் மறுஅறிவித்தலின்றி இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமம் வழங்கல் இடைநிறுத்தப்பட்ட தெரிவுசெய்யப்பட்ட பொருட்களுடனும் 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகள் (2312/77ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது) விடுக்கப்பட்டன.
- தற்காலிக இடைநிறுத்தலின் இறக்குமதிகளின் கீழும் குறித்த அதிகாரிகளின் ஒப்புதலுடன் விலக்களித்தல்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட நியதிகளின் கீழும் ஒன்றிணைக்கப்பட்ட இறக்குமதிப் பட்டியலுடன் 2023ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2312/78ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது) விடுக்கப்பட்டன.

2023 சனவரி 19

- திறந்த கணக்கு மற்றும் சரக்கு கணக்கு கொடுப்பனவு நியதிகளின் கீழ் இலங்கையிலுள்ள துறைமுகத்தில் அல்லது விமானநிலையத்தில் கோதுமை மாவின் இறக்குமதிச் சரக்கு வந்தடையும் திகதியை 2023 சனவரி 31 வரை நீடிக்கும் விதத்தில், 2023ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க கொடுப்பனவு நியதிகள் மீதான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2315/46ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2023 பெப்புருவரி 22

- 2023ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க கொடுப்பனவு நியதிகள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன (2320/46ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)
    - முனைக்கோடி தொழிற்பாடுகளினால் உழைக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலிருந்து குறித்துரைக்கப்பட்ட அத்தகைய தொழிற்பாடுகளை வழங்குவதற்குத் தேவையாகக் காணப்படுகின்ற பொருட்களை இறக்குமதி செய்வதற்காக தமது கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்பவர்களுக்காக கொடுப்பனவு நியதிகளையும் திறந்த கணக்கு சரக்கு கணக்கு அனுமதித்தல்,
    - 2022ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க நியதிகள் மீதான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகளால் விடுக்கப்பட்ட 5(i)ஆம் இலக்க ஒழுங்குவிதியை மாற்றீடு செய்தல் (2294/29ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

- 2023ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளால் (2312/78ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது) விடுக்கப்பட்ட 8(க)ஆம் இலக்க ஒழுங்குவிதியை நீக்கி பதிலீடு செய்யும் விதத்தில் 2023ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2320/47ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

2023 மார்ச்சு 24

- 2023ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2324/45ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது) நீக்கப்பட்டு, 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதியினால் வழங்கப்பட்ட 3(ஆ) ஒழுங்குவிதி பதலீடுசெய்யப்பட்டது (2107/45ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2023 ஏப்பிறல் 06

- ஆவணங்களுக்கு எதிரான ஏற்பு நியதிகள் மற்றும் ஆவணங்களுக்கு எதிரான கொடுப்பனவு நியதிகளின் கீழ் பால்மா மற்றும் சிவப்பு முழு பருப்பு ஆகியவற்றின் இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் வகையில் 2023ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கக் கொடுப்பனவுகள் நியதிகள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் (2326/40ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டது) வழங்கப்பட்டன.
- 2023 யூன் 01 அன்று அல்லது அதற்கு பின்னர் ஏதேனும் கடல் மூலம் அல்லது விமான நிலையங்களுக்கு வந்தடைந்த ஒரு தடவை பயன்படுத்தப்படும் பிளாத்திக் பொருட்களை இறக்குமதி செய்வதை ஒழுங்குமுறைப்படுத்தும் வகையில் 2023ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க (2326/41ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டு அப்பொருட்கள் கொண்டுவரப்படும் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஏற்றுமதி செய்த நாட்டிற்கு மீள் ஏற்றுமதி செய்யப்படும்.

2023 யூன் 09

- வாடிக்கையாளர் மற்றும் முதலீட்டு பொருட்கள் உள்ளடங்கலாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட பொருட் பட்டியலை (286 இணங்குவிப்புக் குறியீடுகள்) இறக்குமதி செய்வதை அனுமதிக்கும் வகையில் 2023ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன(2335/26ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2023 யூலை 20 - வாடிக்கையாளர் மற்றும் முதலீட்டு பொருட்கள் உள்ளடங்கலாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட பொருட் பட்டியலை (327 இணங்குவிப்புக் குறியீடுகள்) இறக்குமதி செய்வதை அனுமதிக்கும் வகையில் 2023ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன (2341/38ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2023 ஒத்தோபர் 09 - வாகனங்கள் நீங்கலாக, வாடிக்கையாளர் மற்றும் முதலீட்டு பொருட்கள் உள்ளடங்கலாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட பொருட் பட்டியலை (299 இணங்குவிப்புக் குறியீடுகள்) இறக்குமதி செய்வதை அனுமதிக்கும் வகையில் 2023ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன (2353/16ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2024 சனவரி 11 - பல்வேறு அரசாங்க நிறுவனங்களின் குறித்த தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட தெரிவுசெய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கும் வகையில், 2024ஆம் அண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன (2366/19ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2024 பெப்புருவரி 07 - 2023ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதியினால் (2312/78ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது) வழங்கப்பட்ட 12(அ)ஆம் இலக்க ஒழுங்குவிதியை திருத்தம்செய்யும் வகையில், வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கு முழுதாக மின்சாரத்தில் இயக்கப்படும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதித்து காலப்பகுதியை நீடிக்கும்விதத்தில் 2024ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன (2370/15ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2024 பெப்புருவரி 19 - அங்கீகாரமளிக்கப்பட்ட தொழிற்துறையொன்றினால் செயன்முறைப்படுத்துவதற்கு மற்றும் மீள் ஏற்றுமதி நோக்கத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட தானியங்களை ஏற்றுமதி செய்வதற்கு (உ-ம்: மிளகு, சாதிக்காய் மற்றும் சாதிப்பத்திரி போன்றன) அனுமதிக்கும் விதத்தில் 2024ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன (2372/04ஆம்

இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது) (இவ் ஒழுங்குவிதிகள் 2024 மாச்சு 19 அன்று இரத்துச்செய்யப்பட்டன).

2024 பெப்புருவரி 28 - 2022ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கொடுப்பனவு நியதிகள் (2278/21ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது) மீதான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளினால் வழங்கப்பட்ட இறக்குமதிக்கான ஆவணங்களுக்கு எதிரான கொடுப்பனவு மற்றும் ஆவணங்களுக்கு எதிரான ஏற்பு கொடுப்பனவு நியதிகளின் முன் உறுதிப்படுத்தல் தேவைப்பாட்டுடன் தொடர்புடைய 6ஆம் இலக்க ஒழுங்குவிதியை நீக்கும் விதத்தில் 2024ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன (2373/28ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

2024 மாச்சு 19 - பல்வேறு அரசாங்க நிறுவனங்களின் குறித்தத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட தெரிவுசெய்யப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கும் வகையில், 2024ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன (2376/14ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

**வரிச் சீராக்கங்கள்**

**வருமான வரி**

2023 மே 08 - 2023ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் (திருத்தம்) சட்டம் பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்டது.

2023 மே 31 - 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கீழ் ஏற்கனவே பதிவுசெய்யப்பட்டவர்கள் தவிர, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடனான கட்டாய பதிவானது 2023 யூன் 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில், 14 பிரிவுகளின் தொழில்சார் நிபுணர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இருப்பினும், 2023 திசெம்பர் 31 அன்றுள்ளவாறு, 18 வயதிற்கு அல்லது அதற்கு மேற்பட்ட வயதைக் கொண்ட மேலே குறிப்பிடப்பட்ட ஏதேனும் பிரிவுகளினுள் சார்ந்திராத எந்தவொரு தனிப்பட்டவர்களும், 2024

சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் பதிவுசெய்தல் வேண்டும் (2334/21ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

**பெறுமதிசேர் வரி**

2023 திசெம்பர் 13 - பெற்றோல், டீசல் மற்றும் திரவப்பெற்றோலிய வாயு உள்ளடங்கலாக குறித்த பொருட்கள் மீதான ஏற்புடைய பெறுமதிசேர் வரி விலக்களிப்பு 2024 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் நீக்கப்பட்டது (2023ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் (திருத்தம்) சட்டம்)

2023 திசெம்பர் 19 - பொருட்களின் இறக்குமதி அதேபோன்று பொருட்கள் மற்றும் பணிகளின் நிரம்பல் மீதான பெறுமதிசேர் வரி வீதம் 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது (2363/22ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்).

2024 மாச்சு 20 - பெறுமதிசேர் வரிப் பதிவுசெய்தல் மட்டமானது 2024 சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் ஆண்டொன்றுக்கு ரூ.80 மில்லியனிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ.60 மில்லியனிற்கு குறைக்கப்பட்டது (2024ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் (திருத்தம்) சட்டம்).

**கலால் தீர்வை**

2023 சனவரி 01 - பெற்றோல் மற்றும் டீசல் மீதான கலால் தீர்வை 2023 சனவரி 03 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் திருத்தப்பட்டது (2312/68ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

| விடயம் | திருத்தத்திற்கு முன்னரான வரி (லீற்றரொன்றிற்கு ரூ.) | திருத்தப்பட்ட வரி (லீற்றரொன்றிற்கு ரூ.) |
|---|---|---|
| பெற்றோல் (92 ஒக்ரேன்) | 27.00 | 52.00 |
| பெற்றோல் (95 ஒக்ரேன்) | 27.00 | 52.00 |
| ஏனையவை | 27.00 | 52.00 |
| 10 மில்லிகிறாமை/கி.கிறாமை (ஒரு மில்லியனுக்கான பகுதிகள்) விஞ்சாமல் கந்தகத்தை உள்ளடக்கும் சிறப்பு டீசல் | 13.00 | 38.00 |
| 10 மில்லிகிறாமை/கி.கிறாமை (ஒரு மில்லியனுக்கான பகுதிகள்) விஞ்சி 500 | 6.00 | 31.00 |

| | | |
|---|---|---|
| மில்லிகிறாமை/கி.கிறாமை (ஒரு மில்லியனுக்கான பகுதிகள்) கந்தகத்தை உள்ளடக்கும் ஏனைய டீசல் | | |
| ஏனையவை | 13.00 | 38.00 |

2023 சனவரி 01 - 2023 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் சிகரெட்டுக்கள் மீதான கலால் தீர்வை திருத்தப்பட்டது (2312/68ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

| **விடயம்** | **திருத்தத்திற்கு முன்னரான வரி (1,000 சிகரெட்டுக்களுக்கு ரூ.** | **திருத்தப்பட்ட வரி (1,000 சிகரெட்டுக்களுக்கு ரூ.** |
|---|---|---|
| சிகரெட்டுகள், ஒவ்வொன்றும் 60 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை | 6,750 | 13,360 |
| சிகரெட்டுகள், ஒவ்வொன்றும் 60 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சி 67 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை | 28,850 | 34,620 |
| சிகரெட்டுகள், ஒவ்வொன்றும் 67 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சி 72 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை | 41,100 | 49,320 |
| சிகரெட்டுகள், ஒவ்வொன்றும் 72 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சி 84 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை | 46,600 | 55,920 |
| சிகரெட்டுகள், ஒவ்வொன்றும் 84 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சுபவை | 51,800 | 62,160 |

2023 சனவரி 03 - 2023 சனவரி 03இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில குடிவகைகள் மீதான கலால் தீர்வை திருத்தப்பட்டது (2312/70ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

| விடயம் | திருத்தத்திற்கு முன்னரான வரி (மதுபான லீற்றரொன்றிற்கு ரூ.) | திருத்தப்பட்ட வரி (மதுபான லீற்றரொன்றிற்கு ரூ.) |
|---|---|---|
| விசேட சாராயம் | 4,180 | 5,000 |
| வெல்லப்பாகு, பனை, தேங்காய் மற்றும் பதப்படுத்தப்பட்ட சாராயம் | 4,460 | 5,350 |
| நாட்டில் தயாரிக்கப்படும் “வெளிநாட்டு” வெறியக்குடிவகை | 4,570 | 5,500 |
| சிட்டையில் குறிக்கப்பட்டவாறு உண்மையான பலத்தின் 5 சதவீதம் மற்றும் அதற்கும் குறைவான மோல்ட் மதுபானம் | 3,300 | 3,960 |
| சிட்டையில் குறிக்கப்பட்டவாறு உண்மையான பலத்தில் 5 சதவீதத்தை விடக் கூடுதலான மோல்ட் மதுபானம் | 3,450 | 4,150 |
| வைன் | 3,300 | 3,960 |
| சேக் | 900 | 1,080 |
| நாட்டில் தயாரிக்கப்பட்ட பால் சார்ந்த குடிவகை | - | 2,750 |
| சிட்டையில் குறிக்கப்பட்டவாறு உண்மையான பலத்தின் 4 சதவீதத்திற்கும் அதிகமல்லாமல் நாட்டில் தயாரிக்கப்பட்ட அப்பிள் பழச்சாற்றிலான குடிவகை | - | 3,000 |

2023 மே 31 - எரிபொருள் (பெற்றோல் மற்றும் டீசல்) தொடர்பான ஏற்புடைய கலால் தீர்வை வீதம் (விசேட ஏற்பாடு) லீட்டரொன்றுக்கு ரூ.25இனால் அதிகரிக்கப்பட்டது (2334/23ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)

| **விடயம்** | **திருத்தத்திற்கு முன்னரான வரி (லீற்றரொன்றிற்கு ரூ.)** | **திருத்தப்பட்ட வரி (லீற்றரொன்றிற்கு ரூ.)** |
|---|---|---|
| பெற்றோல் (92 ஒக்ரேன்) | 52.00 | 77.00 |
| பெற்றோல் (95 ஒக்ரேன்) | 52.00 | 77.00 |
| ஏனையவை | 52.00 | 77.00 |
| 10 மில்லிகிறாமை/கி.கிறாமை (ஒரு மில்லியனுக்கான பகுதிகள்) விஞ்சாமல் கந்தகத்தை உள்ளடக்கும் சிறப்பு டீசல | 38.00 | 63.00 |
| 10 மில்லிகிறாமை/கி.கிறாமை (ஒரு மில்லியனுக்கான பகுதிகள்) விஞ்சி 500 மில்லிகிறாமை/கி.கிறாமை (ஒரு மில்லியனுக்கான பகுதிகள்) கந்தகத்தை உள்ளடக்கும் ஏனைய டீசல் | 31.00 | 56.00 |
| ஏனையவை | 38.00 | 63.00 |

2023 யூன் 16 - பால்மிடிக் அமிலம் (இணங்குவிப்பு குறியீடு 2915.70.10) மற்றும் கொழுப்பு அமிலம் (இணங்குவிப்பு குறியீடு 2915.90.10) மீதான கலால் (விசேட ஏற்பாட்டு) தீர்வையானது செலவு, காப்புறுதி மற்றும் கப்பல் சரக்கு பெறுமதியைக் கொண்ட 29 சதவீதத்தில் விதிக்கப்பட்டது (2336/69ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2023 யூன் 30 - வெறியக் குடிவகை மீதான கலால் தீர்வையானது 2023 யூலை 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் திருத்தம்செய்யப்பட்டது (2338/57ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)

| **விடயம்** | **திருத்தத்திற்கு முன்னரான வரி (மதுபான லீற்றரொன்றிற்கு ரூ.)** | **திருத்தப்பட்ட வரி (மதுபான லீற்றரொன்றிற்கு ரூ.)** |
|---|---|---|
| விசேட சாராயம் | 5,000 | 6,000 |
| வெல்லப்பாகு, பனை, தேங்காய் மற்றும் பதப்படுத்தப்பட்ட சாராயம் | 5,350 | 6,420 |
| நாட்டில் தயாரிக்கப்படும் "வெளிநாட்டு" வெறியக்குடிவகை | 5,500 | 6,600 |
| சிட்டையில் குறிக்கப்பட்டவாறு உண்மையான பலத்தின் 5 சதவீதம் மற்றும் அதற்கும் குறைவான மோல்ட் மதுபானம் | 3,960 | 4,750 |
| சிட்டையில் குறிக்கப்பட்டவாறு உண்மையான பலத்தில் 5 சதவீதத்தை விடக் கூடுதலான மோல்ட் மதுபானம் | 4,150 | 4,980 |
| வைன் | 3,960 | 4,750 |
| சேக் | 1,080 | 1,300 |
| நாட்டில் தயாரிக்கப்பட்ட பால் சார்ந்த குடிவகை | 2,750 | 3,300 |
| சிட்டையில் குறிக்கப்பட்டவாறு உண்மையான பலத்தின் 4 சதவீதத்திற்கும் அதிகமல்லாமல் நாட்டில் தயாரிக்கப்பட்ட அப்பிள் பழச்சாற்றிலான குடிவகை | 3,000 | 3,600 |

2023 யூன் 30 – 2023 யூலை 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் சிகரெட்டுக்கள் மீதான கலால் தீர்வை திருத்தப்பட்டது (2338/58ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

| **விடயம்** | **திருத்தத்திற்கு முன்னரான வரி (1,000 சிகரெட்டுக்களுக்கு ரூ.)** | **திருத்தப்பட்ட வரி (1,000 சிகரெட்டுக்களுக்கு ரூ.)** |
|---|---|---|
| சிகரெட்டுகள், ஒவ்வொன்றும் 60 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை | 13,360 | 16,030 |
| சிகரெட்டுகள், ஒவ்வொன்றும் 60 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சி 67 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை | 34,620 | 41,540 |

| | | |
|---|---|---|
| சிகரெட்டுகள், ஒவ்வொன்றும் 67 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சி 72 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை | 49,320 | 59,180 |
| சிகரெட்டுகள், ஒவ்வொன்றும் 72 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சி 84 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை | 55,920 | 67,100 |
| சிகரெட்டுகள், ஒவ்வொன்றும் 84 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சுபவை | 62,160 | 74,590 |

2023 திசெம்பர் 31 - வெறியக் குடிவகை மீதான கலால் தீர்வையானது 2024 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் திருத்தம்செய்யப்பட்டது (2364/35ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)

| **விடயம்** | **திருத்தத்திற்கு முன்னரான வரி (மதுபான லீற்றரொன்றிற்கு ரூ.)** | **திருத்தப்பட்ட வரி (மதுபான லீற்றரொன்றிற்கு ரூ.)** |
|---|---|---|
| விசேட சாராயம் | 6,000 | 6,840 |
| வெல்லப்பாகு, பனை, தேங்காய் மற்றும் பதப்படுத்தப்பட்ட சாராயம் | 6,420 | 7,320 |
| நாட்டில் தயாரிக்கப்படும் “வெளிநாட்டு” வெறியக்குடிவகை | 6,600 | 7,525 |
| சிட்டையில் குறிக்கப்பட்டவாறு உண்மையான பலத்தின் 5 சதவீதம் மற்றும் அதற்கும் குறைவான மோல்ட் மதுபானம் | 4,750 | 5,415 |
| சிட்டையில் குறிக்கப்பட்டவாறு உண்மையான பலத்தில் 5 சதவீதத்தை விடக் கூடுதலான மோல்ட் மதுபானம் | 4,980 | 5,680 |
| வைன் | 4,750 | 5,415 |
| சேக் | 1,300 | 1,480 |
| நாட்டில் தயாரிக்கப்பட்ட பால் சார்ந்த குடிவகை | 3,300 | 3,760 |
| சிட்டையில் குறிக்கப்பட்டவாறு உண்மையான பலத்தின் 4 சதவீதத்திற்கும் அதிகமல்லாமல் நாட்டில் தயாரிக்கப்பட்ட அப்பிள் பழச்சாற்றிலான குடிவகை | 3,600 | 4,105 |

2023 திசெம்பர் 31 - 2024 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் சிகரெட்டுக்கள் மீதான கலால் தீர்வை திருத்தப்பட்டது (2364/36ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

| **விடயம்** | **திருத்தத்திற்கு முன்னரான வரி (1,000 சிகரெட்டுக்களுக்கு ரூ.** | **திருத்தப்பட்ட வரி (1,000 சிகரெட்டுக்களுக்கு ரூ.** |
|---|---|---|
| சிகரெட்டுகள், ஒவ்வொன்றும் 60 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை | 16,030 | 18,270 |
| சிகரெட்டுகள், ஒவ்வொன்றும் 60 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சி 67 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை | 41,540 | 47,360 |
| சிகரெட்டுகள், ஒவ்வொன்றும் 67 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சி 72 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை | 59,180 | 67,470 |
| சிகரெட்டுகள், ஒவ்வொன்றும் 72 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சி 84 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை | 67,100 | 76,490 |
| சிகரெட்டுகள், ஒவ்வொன்றும் 84 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சுபவை | 74,590 | 85,030 |

2023 திசெம்பர் 31 - பெற்றோல் மற்றும் டீசல் மீதான கலால் தீர்வை 2024 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் குறைக்கப்பட்டது (2364/36ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)

| **விடயம்** | **திருத்தத்திற்கு முன்னரான வரி (லீற்றரொன்றிற்கு ரூ.)** | **திருத்தப்பட்ட வரி (லீற்றரொன்றிற்கு ரூ.)** |
|---|---|---|
| பெற்றோல் (92 ஒக்ரேன்) | 77.00 | 72.00 |
| பெற்றோல் (95 ஒக்ரேன்) | 77.00 | 72.00 |
| ஏனையவை | 77.00 | 72.00 |
| 10 மில்லிகிறாமை/கி.கிறாமை (ஒரு மில்லியனுக்கான பகுதிகள்) விஞ்சாமல் கந்தகத்தை உள்ளடக்கும் சிறப்பு டீசல் | 63.00 | 57.00 |

| | | |
|---|---|---|
| 10 மில்லிகிறாமை/கி.கிறாமை (ஒரு மில்லியனுக்கான பகுதிகள்) விஞ்சி 500 மில்லிகிறாமை/கி.கிறாமை (ஒரு மில்லியனுக்கான பகுதிகள்) கந்தகத்தை உள்ளடக்கும் ஏனைய டீசல் | 56.00 | 50.00 |
| ஏனையவை | 63.00 | 57.00 |

**சுங்கத் தீர்வை**

2023 மாச்சு 28 - 2023இன் வரவு செலவு திட்டத்தின் 34.6ஆம் இலக்க முன்மொழிவிற்கு இசைவாக செஸ் தீர்வை அகற்றலை ஆதரவளிப்பதற்காக சுங்க இறக்குமதி தீர்வையின் மூன்று தீர்வை முறைமை (three - band tarrif system) 2023 மாச்சு 29இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் 0 சதவீதம், 10 சதவீதம் மற்றும் 15 சதவீதம் ஆகிய சதவீதங்களிலிருந்து 0 சதவீதம், 15 சதவீதம் மற்றும் 20 சதவீதங்களுக்கு திருத்தப்பட்டது (2325/07ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2023 மே 31 - தெரிவுசெய்யப்பட்ட பொருட்கள் மீதான சுங்க இறக்குமதி தீர்வையின் சதவீதமாக மிகைக்கட்டணம் 2023 யூன் 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் விதிக்கப்பட்டது (2334/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)

2023 யூன் 16 - பால்மிடிக் அமிலத்திற்கும் கொழுப்பு அமிலத்திற்கும் புதிய இணங்குவிப்பு முறைமை குறியீடுகள் (தேசிய உபப்பிரிவுகள்) உருவாக்கப்பட்ட அதேவேளை உள்நாட்டு ஒப்பனைக் கைத்தொழிலை வசதியளிப்பதற்கு தாவர எண்ணெய் கொழுப்பு அமிலத்தின் தீர்வைக் கட்டமைப்பை போன்று கட்டமைப்பொன்று விதிக்கப்பட்டது (2336/72 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2023 யூன் 30 - சுங்க இறக்குமதி தீர்வையின் தீர்வை தாராளமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் “6” ஆம் வகைப்படுத்தலின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆறு வருடாந்த சமமான தவணைக்கட்டணங்களில் முதலாவது தவணைக்கட்டணம் 2023 யூலை 01இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இலங்கை சிங்கப்பூர் இலவச வர்த்தக உடன்படிக்கையின் கீழ் 1,238 தீர்வை மட்டங்களுக்கு அகற்றப்பட்டது (2338/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2023 யூலை 21 - தொழில்நிலை உருவாக்கம், மற்றும் புத்தாக்க மற்றும் நிலைபெறத்தக்க உற்பத்திகளின் அபிவிருத்தி ஆகியவற்றுடன் இணைந்து, உள்ளூர் தயாரிப்புக்களை அதிகரிக்கும் நோக்குடன், உள்ளூர் அச்சிடுதல் மை தயாரிப்பிற்கான மூலப் பொருட்களின் இறக்குமதிப்படுத்தலுக்கிடையில் தீர்வை முரண்பாட்டை நீக்குவதற்கு கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் பரிந்துரைக்குட்பட்டு இணங்குவிப்பு குறியீடு 3903.90.10 மற்றும் 3906.90.10 தொடர்பில் வாடிக்கையாளர் இறக்குமதித் தீர்வையின் 5 சதவீத சலுகை வீதம் அறிமுகப்படுத்தப்பட்டது (2341/64ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)

2023 ஓகத்து 29 - 15 சதவீதம் அல்லது கி.கிறாமொன்றுக்கு ரூ. 16 தொடக்கம் 20 அல்லது கி.கிறாமொன்றுக்கு ரூ.27 கொண்ட கோதுமை மாவின் இறக்குமதிப்படுத்தல் மீதான சுங்கத் தீர்வை (2347/06ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)

**செஸ்**

2023 மாச்சு 28 - 2023 வரவுசெலவு 34.6ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம், முன்று ஆண்டுகால தவணைகளின் செஸ் தீர்வையை நீக்குதலானது உலக வங்கியின் முன்மொழியப்பட்ட அபிவிருத்திக் கொள்கை கடன் வசதியின் நிகழ்ச்சித்திட்டத்திற்கு முன்னரான நிபந்தனைகளிலொன்றாகும். இங்கு செஸ் தீர்வையின் முதல் தவணையை நீக்குதலானது 2023 மாச்சு 31இற்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இதற்கமைய, 8,155 இணங்குவிப்புக் குறியீடுகளில் 2,668 இணங்குவிப்புக் குறியீடுகளைக் கொண்ட செஸ் (08 இலக்கங்கள் அடிப்படையில்) தீர்வையின் முதலாவது தவணையை நீக்கும் வகையில், வழங்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலானது மாறுப்பட்ட வீதத்தில் செஸ் தீர்வைக்குட்படுத்தப்பட்டுள்ளது (2325/06ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2023 யூன் 16 - சீமெந்து இறக்குமதி மீதான செஸ் தீர்வையானது அதிகரிக்கப்பட்ட அதேவேளை உலகளாவிய மற்றும் உள்நாட்டு பொருளாதார நிலைமைகளுக்கிணங்க சீமெந்தின் சில்லறை விலையை சீராக்குவதற்கு சீமெந்து கிளிங்கர்களின் இறக்குமதிக்கு கிலோ கிறாமொன்றுக்கு ரூ.1 கொண்டசெஸ் தீர்வை விதிக்கப்பட்டது (2336/71ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2023 யூலை 21 - இறுதிப் பொருட்களாக அச்சிடும் மை மற்றும் அச்சிடும் மையின் உள்நாட்டுத் தயாரிப்பிற்கான இடைநிலைப்பொருட்களாக இறக்குமதி செய்யப்பட்ட முதனிலை வடிவத்திலுள்ள பொலிமர்கள் ஆகியவற்றில் அவதானிக்கப்பட்ட ஒழுங்கற்ற தீர்வையை நிவர்த்திசெய்வதற்கு கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் பரிந்துரைத்தல் மீது முதன்மை வடிவத்தில் ஸ்ரைன் பொலிமர்கள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட உள்நாட்டு அச்சிடும் மை வடிவத்தினாலான அக்ரலிக் பொலிமர்கள் ஆகியவற்றின் இறக்குமதிப்படுத்தலுக்கான செஸ் தீர்வை மீதான விலக்களிப்பு வழங்கப்பட்டது (2341/63ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

**துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை**

2023 ஏப்பிறல் 04 - 2023 வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழிந்ததன் பிரகாரம் துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வையின் ஐந்து ஆண்டுகால கட்ட முடிவுறுத்தலின் முதற் படியாக 1,631 மீதான ஏற்புடைய துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வை விலக்களிப்பட்டது (2326/02ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)

2023 செத்தெம்பர் 21 - பால் மற்றும் கிறீம் மீதான ஏற்புடைய விலக்களிப்பானது (செறிவூட்டப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட சீனி அல்லது ஏனைய இனிப்புக்களை உள்ளடக்கியது) நீக்கப்பட்டது (2350/45ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2023 திசெம்பர் 31 - பெற்றோல், டீசல், மற்றும் திரவப் பெற்றோலிய வாயு உள்ளடங்கலாக குறித்த பொருட்கள் மீதான துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வை 2024 சனவரி 01 தொடக்கம் விலக்களிக்கப்பட்டது (2364/37ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

**ஏனைய வரிகளும் தீர்வைகளும்**

2023 பெப்புருவரி 07 - மட்டக்களப்பு பன்னாட்டு விமான நிலையத்தில் ஒவ்வொரு வானூர்தியும் தரையிறக்கம் செய்வதற்கும் தரித்து நிற்பதற்குமானத் விமானத் தளங்களைப் பயன்படுத்துவதற்கான கட்டணங்கள் விதிக்கப்பட்டன (2318/14ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2023 மே 31 - பணவனுப்பல்கள், நாணயக் கடிதங்களை நிறுவுதல் மற்றும் மோட்டார் வாகனங்களைப் பதிவுசெய்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய காலப்பகுதிகள் 2023 பெப்புருவரி 10ஆம் திகதியிடப்பட்ட 2318/53ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது (முழுமையான மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் வாகனங்களின் வரியற்ற எல்லை புலம்பெயர் தொழிலாளர்களுக்கான ரூ.6 மில்லியன் தொடக்கம் ரூ.12 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டது) (2334/24ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2023 ஓகத்து 21 - 2023ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க பந்தயம் மற்றும் விளையாடுவதற்கான தீர்வைச் (திருத்தம்) சட்டம் பாராளுமன்றத்தினால் சட்டமாக்கப்பட்டது.

2024 மாச்சு 20 - சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு தீர்வைக்கான ஏற்புடைய பதிவுசெய்தல் எல்லை 2024 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் ஆண்டிற்கு ரூ.120 மில்லியனிலிருந்து ஆண்டிற்கு ரூ.60 மில்லியனிற்கு குறைக்கப்பட்டது (2024ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு தீர்வை (திருத்த) சட்டம்).

**அரச செலவினம்**

2023 சனவரி 12 - 2023 சனவரி 01இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சியாளர்களின் ஊழியர்களால் வரி விதிக்கத்தக்க வருமானம் அல்லது தொழில்நிலை வருமானம் என்பவற்றிற்கு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. வரியைச் செலுத்தவதற்கு பொறுப்புமிக்க ஊழியர்களின் வருவாய்களிலிருந்து முற்பண தனியாள் வருமான வரி விதிக்கப்பட வேண்டிய அதேவேளை தனியார் ஊதியங்கள் ஒன்றுசேர்ந்த உடன்படிக்கைகளின் கீழ் காணப்பட்ட போதும் வரி என்பது நிறுவனத்திற்கான செலவொன்றாக கருதப்படலாகாது என அறிவிக்கப்பட்டது (01/2023ஆம் இலக்க பொதுத் தொழில்முயற்சி சுற்றறிக்கை).

| | |
|---|---|
| 2023 சனவரி 27 | - 2023ஆம் ஆண்டிற்கான மீண்டெழும் செலவினங்களை 6 சதவீதத்தாலும் அரச செலவின முகாமைத்துவத்தையும் கட்டுப்படுத்துவதற்காக சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது (01/2023ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை). |
| 2023 ஏப்பிறல் 21 | - அஸ்வெசும நலன்புரி நன்மை கொடுப்பனவுத் திட்ட அட்டவணைகள் 2023 யூலை 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன (2328/13ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) |
| 2023 யூன் 16 | - அரச செலவினங்களை முன்மதியுடைய மற்றும் உற்பத்தித்திறன்மிக்க ஒழுங்குமுறைப்படுத்தலின் மூலம் செயற்றிட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளின் அடைதலை உறுதிசெய்யும் வகையில் புதிய அபிவிருத்திச் செயற்றிட்டங்களின்/நிகழ்ச்சித்திட்டங்களின் முறைசார்ந்த மதிப்பீட்டிற்கான தேசிய அபிவிருத்திக் குழுக்களின் வழிகாட்டல் வழங்கப்பட்டது (தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல. 0132023). |
| 2023 திசெம்பர் 13 | - 2023ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டு 2023 திசெம்பர் 13 அன்று வெளியிடப்பட்டது. |

**ஏனையவை**

| | |
|---|---|
| 2023 ஓகத்து 08 | - 2023ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க ஊழலுக்கு எதிரான சட்டம் பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டது.. |